"முனைமுகத்து மாற்றவர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்டது அரண்" (குறள் 749)

போர்முனையில் பகைவர் அழியும்படியாக (உள்ளிருந்தவர் செய்ய) போர்ச் செயல் வகையால் பெருமை பெற்றுச் சிறப்புடையதாய் விளங்குவது அரண் ஆகும். 200 ஆண்டுகள் செம்மறியாடாக வாழ்வதைக் காட்டிலும் இரண்டு நாட்கள் சிங்கமாக வாழ்ந்தால் போதும் என்று மொழிந்த திப்பு சுல்தானின் வீரம் செறிந்த வாழ்க்கையின் முடிவு (3.5.1799 - 1.30 பிற்பகல் ஏற்பட்டது. 1799-ல் நான்காம் மைசூர் போரின் போது இக் கோட்டை தவிடு பொடியாக்கப்பட்டது.

---

1. Vestiges of Old Madras Page No:203 Volume-II.
2. வி.இராமமூர்த்தி தெ[illegible]யக் கோட்டைகள் 1966

மைசூர் கோட்டை:-

இக் கோட்டை இந்தியாவின் தலைச்சிறந்த கட்டிடங்களுள் ஒன்றாகும். இந்தோ-சிராசினிக் வேலைப்பாட்டில் அமைக்கப்-பட்ட அழகிய வண்ண மாளிகையையொட்டி, கற்களால் அமைத்த சிறு கோட்டையும் உண்டு. ஹைதர், திப்புக்கு முன்பாக ராஜ உடையார் காலத்திலேயே 1657-ல் மைசூரில் ஒரு கோட்டை எழுப்பப்பட்டது. ஆனால், அது மராத்தியர் படையெடுப்பால் அழிவுற்றது. பிறகு 1799-ல் மும்முடி கிருஷ்ண தேவராயர் காலத்தில்தான் இப்போது காணும் கோட்டை எழுந்தது.[1]

குடகு கோட்டை:-

குடகு காவிரி உற்பத்தியாகும் இடமாகும். இயற்கை வளம் சூழ்ந்த பிரதேசம் - "தென்னிந்தியாவின் ஸ்காட்லாந்து" என்று வர்ணிக்கப்படுமிந்த மலை மீதுள்ள [illegible]ம் அழகிய கோட்டை 1681-ல் எழுப்பப்பட்டது. இது முதலில் திப்புவின் அதிகாரத்துக்குள் அடங்கியிருந்தது. பின்னர் ஆங்கிலேயர் பறித்துக் கொண்டனர். வீர ராஜாவை குடகுக்கு கொற்றவனாக்கினார்கள். லிங்காயத்து மன்னர்கள் அரண்மனை இக்கோட்டைக்குள் உள்ளன.

பீஜப்பூர்:-

மேலைச் சாளுக்கியரின் சாசனங்கள் கூறும் பிஜப்பூர் மிகவும் தொன்மையான ஊர். அலி ஷாஹி இனத்தவரின் தலைநகர். நகரத்தின் வாயிலில் கோட்டை ஸ்தூபிகள், மசூதிகள், சமாதிகள் உள்ளன. இக்கோட்டைக்குள்ளே தான் பிஜப்பூர் நகரும் உள்ளது. இந்நகரின் பரப்பு சுமார் 1000 ஏக்கர்கள் ஆகும். 9 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கோட்டைச் சுவரின் உயரம் 30 அடியிலிருந்து 50 அடி ஆகும். சுமார் 40 அடியும் அகழி உண்டு. கொத்தளங்கள் 100க்கு மேல் உள்ளன. இன்றுள்ள கோட்டை 1565-ல் கட்டப்பட்டது.[1] இக்கோட்டைக்கு ஐந்து நுழைவாயில்களுண்டு.

1. பி. இராமமூர்த்தி- தென்னிந்திய கோட்டைகள், 1966.

பாதாமி கோட்டை (வாதாபி) :-

மைசூரின் வடக்கே பீஜப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த பார் புகழும் பாதாமி அல்லது வாதாபி நகரம் உளது. தமிழ் நாட்டுடன் முன்பே, பல்லவ முதலாம் மகேந்திரன் மூலமாக தொடர்பு பெற்ற நகரமாகும். இது இங்கே இரண்டு கோட்டைகள் உண்டு. இவை மலைமீதுள்ளன. தெற்கே அமைந்துள்ள கோட்டைக்கு 'ரண மண்டலக் கோட்டை' என்று பெயர். இவை கி.பி.16ம் நூற்றாண்டில் விஜய நகர வேந்தர்கள் பராமரிப்பில் இருந்தது. இது 1746ல் சாவனூர் நவாப்பினால் மராட்டிய பேஷ்வாக்களுக்கு பாதாமி ஒரு மான்யமாக வழங்கப்பட்டது. கி.பி.1778-ல் ஹைதரலி இதைக் கைப்பற்றினார். 1786-ல் பேஷ்வா-நிஜாம் படைகளிடம் வந்தது. கி.பி.1818-ல் ஆங்கிலத் தளபதி ஜெனரல் மன்றோ மராட்டியர்களை அடக்கி பாதாமியைக் கைப்பற்றினார்.[1]

கொச்சிக்கோட்டை:

இது ஒரு மரத்தாலான கோட்டை. கொச்சியை கடைசியாக ஆண்டவன் சேரமான்-பெருமாளுடைய சகோதரியின் மகனான வீர சேகரவர் என்பவர். அதன்பிறகே கி.பி.1502 இல் வாஸ்கோடகாமா கொச்சியில் வந்து இறங்கினார். கி.பி.1503-ல் போர்த்துக் கீசியர்கள் பொது பாதுகாப்புக்காக கொச்சி அரசரின் உரிமை பெற்று, மரத்தாலான கோட்டையைக் கட்டினார்கள்.[2]
உள் நாட்டுக் குழப்பம் காரணமாக 1663-ல் டச்சுக்காரர்கள் கொச்சிக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டனர். மட்டஞ்சேரி இக்கோட்டையின் ஒரு பகுதியாகும். இதற்கு மூன்று வாயில்களுண்டு. டச்சுக்காரர்கள் போர்த்துக் கீசியரின் கோட்டைகளை அழித்துவிட்டு வேறு புதிய கோட்டைகள் நிர்மாணித்து வாயில்களுக்கு தங்கள் நாட்டு மரபுப் பெயர்களைச் சூட்டினர்.

---

1. கி.ராமமூர்த்தி, 1966 தென்னிந்தியக்கோட்டைகள்.
2. " "

கி.பி.1795இல் கொச்சி ஆங்கிலேயர்கள் வசம் பிடிபட்டது.[1]

பாலக்காடு கோட்டை:

பாலக்காடு கோட்டை ஹைதர் அலியால் உருவாக்கப்பட்டது. ஹைதர் மைசூர் உடையாருக்கு தளகர்த்தனாக இருந்தபோது அவர்கள் வசித்து மைசூருக்கு 'சர்வாதிகாரி'யாக மாறினான். மராட்டியர்களை எதிர்த்துப் பணியவைக்கும் அவனது வீரத்தின் முன் ராஜ உடையாரை கைப்பொம்மை ஆக்கி, தாமே மைசூர் சுல்தான் எனப் பிரகடனம் செய்தான். ஆனால் ஹைதர் அமைதியாக ஆள முடியவில்லை. கிழக்கிந்தியக் கம்பெனியார் தலையீட்டினால் ஹைதர் அடிக்கடி போரிட வேண்டிய நிலை ஏற்பட்டது.[2] இதற்காகவே அவன் ஸ்ரீரங்கப்பட்டிணத்திலும், பங்களூரிலும் பிரம்மாண்டமான கோட்டைகள், அகழிகள் அமைத்தான். தன்னாட்சி நிலைபெற இது போல பல கோட்டைகள் எழுப்பினான். அவற்றுள் கேரளத்தில் கட்டப்பட்டக் கோட்டையே "பாலக்காடு" கோட்டையாகும். இக்கோட்டை சதுர வடிவில் இயற்கையெழில் சூழ்ந்த இடத்தில் சிறிய [illegible] மீது கட்டப்பட்டது. சுற்றிலும் அகழி வெட்டப்பட்டது. இக்கோட்டையை 1784ஆம் ஆண்டு (ஹைதரின் மரணத்திற்குப்பின்) ஆங்கிலேயர் தாக்கினர். பதினாறு நாட்கள் முற்றுகையில் ஆங்கிலேயர் வசமானது. 1785-ல் இக்கோட்டை ஆங்கிலேயப் பாணியில் சீரமைக்கப்பட்டது.[3] தற்போது இது பாதுகாப்பு சின்னமாக பராமரிக்கப்பட்டு வருகின்றது.

செஞ்சிக்கோட்டை:

தென்னாற்காடு மாவட்டத்தில் சுமார் 5 மைல் சுற்றளவுக்கு விரிந்து கிடக்கும் கோட்டையிது. சந்திரகிரி

---

1. Malabar District Gazetteer P.432 - 1951.
2. Malabar District Gazetteer P.62 - 1951
3. வி.இராமமூர்த்தி, (1966) தென்னிந்தியக்கோட்டைகள்

ராஜகிரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மூன்று மலைகளுக்கும் நடுவே அமைந்துள்ளது. பிற்காலச் சோழர்களின் கீழூர் கல்வெட்டில், இப்பகுதியை சிங்கபுர நாடு[1] எனக் குறித்துள்ளார்கள். சோழர்கள் காலத்தில் செஞ்சியில் கோட்டைக் கொத்தளங்கள் கி.பி.1209ல் முதன்முதலாக எழுப்பப்பட்டன. இது விஜயநகர வேந்தர்களிடமும், பீஜப்பூர் சுல்தான்களிடமும் வீர சிவாஜியிடமும் இருந்தது. ஔரங்கசீப்பின் தளபதி சுல்பிகர்கான் முற்றுகையில் ஏழு ஆண்டுகளிருந்தது. இதனை அவன் சாரூப்சிங்கிடம் ஒப்படைத்தான், கி.பி.1700–1713 வரை சாரூப் சிங் இங்கிருந்து ஆண்டான். இவனுடைய மகனே ராஜா தேசிங்கு. தந்தைக்குப் பின் 1714–ல் அரியணை ஏறினான். டெல்லி சுல்தானின் அனுமதியின்றி தேசிங்கு பட்டம் சூட்டியதை அறிந்த சுல்தான், தேசிங்கு மீது நடவடிக்கை எடுத்தான். இது ஆற்காடு நவாபு மூலமாக தேசிங்குக்குத் தெரிவிக்கப்பட்டது. தேசிங்கு அதனைப் பொருட்படுத்தாமல் போகவே, நவாப் சாதுல்லா கான் செஞ்சி மீது படையெடுத்தான். மகமத்கான் துணையுடன் தேசிங்கு போரிட்டான். ஆனால் போரினால் எந்தப் பயனுமின்றி 1714–ல் தற்கொலை செய்து கொண்டான். பின்னர் இக்–கோட்டை ஆற்காடு நவாப் வசமானது. கி.பி.1750–ல் பிரெஞ்சுக்காரர்கள் சந்தா சாகிப்புடன் சேர்ந்து செஞ்சி மீது படை எடுத்து இதனைப் பிடித்துக் கொண்டனர். இது 1752–ல் ஆங்கிலேயர்களால் தாக்கப்பட்டது. ஜெனரல் அயர்கூட்டின் படைகளால் 1761ல் செஞ்சி பிடிப்பட்டது.[2] ஹைதர் இருமுறை செஞ்சி மீது படையெடுத்தான் (1780) ஆனால் வெற்றியடையவில்லை சுமார் 500 ஆண்டுகாலம் கர்னாடகச் சமவெளியின் கோட்டை வாயில் என்று புகழ் பெற்றிருந்த செஞ்சிக் கோட்டை இன்று வெறும் நினைவுச் சின்னமாகவேவுள்ளது.[3]

---

1. T.V.S.Pandaratha, History of later choles Part.I (1967)
2. ர.பத்மனாபன் (1957) வெற்றிவீரன் தேசிங்குராஜன்
3. வி.இராமமூர்த்தி (1966) தென்னிந்தியக் கோட்டைகள்.

வேலூர் கோட்டை

இக்கோட்டையும் அங்கேயுள்ள ஜலகண்டேசுவரர் ஆலயமும் கி.பி.1273ல் பொம்மிரெட்டியால் கட்டப்பட்டவையாகும்.[1] முற்றிலும் கருங்கல்லாலான கோட்டையிது. இதிலுள்ள கல்யாண மண்டபம் தென்னகத்து சிற்பக் களஞ்சியம் என்றே கூறலாம். மராட்டிய வீர சிவாஜி இதன் மீது படை எடுத்தான். இது பிற்காலத்தில் நவாப்புகளின் ஆட்சி பீடமாக மாறியது (1724).[2]

1799ல் திப்புவின் மரணத்திற்குப் பிறகு அவன் குடும்பத்தினரை இங்கே காவலில் வைத்தது கம்பெனியாட்சி. 1806ல் வேலூர் படுகொலைகள் இக்கோட்டைக்குள் நடந்தன.[3]

தஞ்சைக்கோட்டை

தஞ்சை பெருங்கோவிலைச் சுற்றியுள்ள பெரிய மதில்களோடு எழுந்த பிரம்மாண்டமான கோட்டையைத்தான் சிவகங்கைக் கோட்டையென்பர். இதனை இராசராச சோழன் கட்டினான். இக்கோட்டையை நாயக்க அரசர்களும் மராட்டிய மன்னர்களும் பழுது பார்த்தும், மாற்றங்கள் ஏற்படுத்தியும் காலத்திற்கேற்றவாறு பாதுகாத்து வந்தனர்.

இக்கோட்டையை, பீஜப்பூர் சுல்தானின் தளபதி ராதல்லகான் சில காலம் தன் காவலில் வைத்திருந்தான். கி.பி.1725ல் நைஜாம் உல்முல்க்கின் தளபதி இவாங்கான் பெரும்படையுடன் வந்து திருச்சி, தஞ்சையைத் தாக்கினான். கி.பி.1734 லிருந்து 1739 வரை தஞ்சை குழப்பத்தில் கிடந்தது. கி.பி.1734ல் சந்தா சாகிப் திடீரென தஞ்சையைத் தாக்கி கோட்டையைக் கைப்பற்றி பதே சாகேயை கோட்டைக்கு காவலராக நியமித்தான்.[4]

---

1. வி.இராமமூர்த்தி (1966) பக்கம்.23 தென்னிந்தியக்கோட்டைகள்.
2. வேலூர் கோட்டை ஜலகண்டேஸ்வரர் கோவில் வரலாறு 1982-ப.6
3.
4. வி.இராமமூர்த்தி, தென்னிந்திய கோட்டைகள் (1966)

திருச்சிக்கோட்டை

"மணி நீரு மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண் - (குறள் 742)

மணிபோல் தெளிந்த நீரும் வெட்டவெளியான நிலமும், மலையும், அழகிய நிழலுடைய காடுமாகிய இவை நான்கும் உடையதே அரண். என்ற வள்ளுவன் கூற்றுக்கேற்ப திருச்சிராப்பள்ளி கோட்டை, கொத்தளங்கள் கொண்டதாக விளங்கியது.

உறையூரும், தஞ்சையும் சோழ நாட்டின் தலைநகர்களாக சிறப்புற்று விளங்கியபோது திருச்சியும் ஒரு பெருமை வாய்ந்த பட்டணமாகவே வளர்ந்து வந்தது. அப்போதே கோட்டைச் சுவர்கள் எழுப்பப்பட்டன.

கி.பி.16ம் நூற்றாண்டில் விசுவநாத நாயக்கர் காலத்திலும் பெரிய மதில்களை எழுப்பி கோட்டையை அமைத்தனர். நகரைச் சுற்றிலும் இரட்டை கோட்டைச் சுவர்கள் கட்டப்பட்டு தேவையான இடங்களில் கொத்தளங்கள், நுழைவாயில்கள், அகழிகள் யாவும் வெட்டப்பட்டு காவிரி வெள்ளம் அகழிக்குள் பாயவும் வழிவகை செய்யப்பட்டது.

கி.பி.1660ல் இக்கோட்டையை பீஜப்பூர் சுல்தான் தாக்கினான். ஆனால் இதனைக் கவர இயலவில்லை. இதே முயற்சி 1675ல் நடந்தது. 1743ல் ஹைதராபாத் நைஜாம் திருச்சி மீது படையெடுத்து வந்தபோது, மராட்டியர்கள் திருச்சியை இழந்தார்கள். திருச்சி 1807ல் ஆங்கிலேயர் கைப்பற்றும்வரை ஆற்காடு நவாப்பிடமே இருந்தது. இக்கோட்டை, பிரஞ்சு மற்றும் ஆங்கிலேயர்களிடையே நடைபெற்ற கர்நாடகப் போரினால் பாதிக்கப்பட்டது. இதனை பிரஞ்சு படைகள் 1757 லிருந்து 1759 வரை முற்றுகையிட்டனர். திருச்சிக் கோட்டை ஒரு பிராந்திய படைத்தளமாகவே பயன்பட்டது.

ஆங்கில ஆதிக்கம் வேரூன்ற ராபர்ட் கிளைவ் திருச்சி நகரில் தான் தம் திட்டங்கள் நிறைவேறக் கண்டான். கர்நாடக புத்தகங்களில் பெற்ற வெற்றியே ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு அஸ்திவாரம் என்றால் திருச்சியே அதன் கருவாக இருந்தது.

<u>திண்டுக்கல் கோட்டை</u>

முற்றியும் முற்றா தெறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற் கரியது அரண். (குறள் 747)

முற்றுகையிட்டும், முற்றுகையிடாது போர் செய்தும் வஞ்சனை செய்தும் எப்படியும் பகைவரால் கைப்பற்ற முடியாத அருமையுடையது அரண் என்று குறட்பா கூறும்.

இது இக்கோட்டை மதுரையையாண்ட நாயக்கர்களால் எழுப்பப்பட்டதால் (திருமலை நாயக்கர் காலம் 1623-1659) திருமலை நாயக்கரின் தளபதி ராமப் பையன் இக்கோட்டை மீது முற்றுகை நடத்தி மைசூர் படையைத் தோற்கடித்தான்.

1736ல் மதுரை நாயக்கர் பரம்பரையைச் சேர்ந்த மீனாட்சி, ஆட்சி புரிந்தபோது சந்தா சாகிப் இக்கோட்டை மீது தாக்குதல் நடத்தி தம் வசப்படுத்தினான். ஆனால் உத்தம பாளையத்து ராமா நாயக்கன், சந்தா சாகிப் படையை தோற்கடித்து திண்டுக்கல்லைக் கைப்பற்றினான். பின்னர், 1745ல் மைசூர் தளபதி பிர்கி வெங்கட்ராவ் திண்டுக்கல் மீது படையெடுத்து வெற்றி கண்டான். இவனை 1755ல் எல்லாப் பாளையக்காரர்களும் சேர்ந்து விரட்டினார்கள். இதனால் பெரிய கலகமே ஏற்பட்டதெனலாம். இதனை மைசூர் மன்னரின் தளபதியாக இருந்த ஹைதர் அலி பெரும்படையுடன் சென்று கலகத்தை அடக்கினான். இவனே மதுரையின் பேரிலும் கண் வைத்தான். அப்போது கான் சாயபு கிழக்கிந்திய கம்பெனியின் படைத்தளபதியாக மதுரையில் இருந்தான். இவன் கி.பி.1757ல் சோழவந்தானிலும் 1760ல் வத்தலக்குண்டிலும் ஹைதரலியை முறியடித்தான்.

ஆற்றுபவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள் (குறள் 741)

(படை எடுத்து) போர் செய்ய செல்பவர்க்கும் அரண் சிறந்ததாகும். படையெடுத்தவர்க்கஞ்சி தன்னைப் புகலிடமாக அடைந்தவர்க்கும் அது சிறந்ததாகும் என்றார் வள்ளுவர். இக்கோட்டை 1772ல் சிவகங்கை மறத்தியான ராணிவேலு நாச்சியாரும், அவரது படைகளும் சுமார் 4000 பேர்கள் கிழக்கிந்திய கம்பெனி படையினர் மீது தாக்குதல் தொடுக்க ஒளிந்திருந்தார்களென கூறப்படுகிறது. கி.பி.1783ல் அதாவது ஹைதர் மரணத்திற்குப் (1782) பிறகு கிழக்கிந்திய கம்பெனிக்கு இக்கோட்டை மாறியது. ஆனால் 1784ல் ஏற்பட்ட மங்களூர் உடன்படிக்கைப்படி திண்டுக்கல் ஹைதரின் மகனான திப்புவிடம் திருப்பியளிக்கப்பட்டது. [1]

கி.பி.1788ல் திப்பு இங்கு நேரில் வந்து வரி வசூல் நடத்த முற்பட்டான். கிழக்கிந்திய படையின் தளபதி கர்னல் ஜேம்ஸ் ஸ்டுவார்டு தலைமையில் ஒரு பெரும் படை திண்டுக்கல் கோட்டையை தாக்கியது. 1792ல் இக்கோட்டை ஆங்கி-லேயருக்குப் போய்ச் சேர்ந்தது. இக்கோட்டை ஆங்கிலேய தலைமைத் தளபதி டிகால்விலந்ட் என்பவன் மேற்பார்வையில் புனரமைக்கப்பட்டது. [2]

ஹைதர் திப்பு இங்கே இரட்டமதில் சிலவற்றை அமைத்தனர். அதன் வசதிகளையும் பெருக்கினார். இக்கோட்டையில் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த பழங்கால ஆலயங்கள் காணப்பட்டன.

---

1. தென்னிந்திய கோட்டைகள், வி.இராமமூர்த்தி 1966.
2. Military Consultation dated 17th November 1798.

ஆற்காடு கோட்டை

கர்நாடகம் என்பது அக்காலத்தில் நெல்லூர் வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சி, நெல்லை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாகும். இதற்கு செஞ்சியும் ஆற்காடும் தலைநகராக முன்பு விளங்கின. முதலில் நவாப்கள் செஞ்சியிலிருந்து ஆண்டனர். பின்னரே அவர்கள் ஆற்காடு நவாப் என்று அழைக்கப்பட்டனர். கி.பி.1749ல் ஆற்காடு நவாப் பதவிக்கு போட்டி ஏற்பட்டது. ஆம்பூர் போரில் நவாப் அன்வரை சந்தா சாகிப் கொலை செய்தான்.[1]

நவாப் பதவிக்காக முகமதலியும், சந்தா சாகிப்பும் கடும் போட்டியில் இறங்கினர். முகம்மதலி திருச்சிக்கு ஓடி நவாப்பாக முடி சூடிக்கொண்டான். சந்தா, பிரெஞ்சுக் காரர்களுடன் சேர்ந்து ஆற்காடு சென்று, நவாப்பாக பட்டம் சூட்டிக் கொள்கிறான். ஆங்கிலேயர் முகம்மதலிக்கு துணை நின்றனர். ஆற்காட்டை நோக்கி ராபர்ட் கிளைவ் படை எடுத்தான். 50 நாள் முற்றுகையில் கோட்டை பிடிபட்டது.[2] ஆற்காடு கோட்டை பழுது நீக்கி பராமரிக்கப்பட்டு கில் பர்டிடம் ஒப்படைக்கப்படுகிறது.

கி.பி.1780ல் ஹைதர் அலி ஆற்காடு மீது படையெடுத்தான். இதனால் நவாப் ஆங்கிலேயர்களின் உதவியை பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பின்னர் அவர்களிடமிருந்து (நவாப்பிடம்) வரி வசூல் உரிமையும் பெற்றனர் ஆங்கிலேயர்.

தென்பாண்டிக்கோட்டைகள் :

தென் தமிழ்நாட்டின் மீது வெள்ளையர்கள் 1755க்குப் பிறகு அதிக கவனம் செலுத்தினர். நவாப் முகம்மதலி வெள்ளை-

---

1. H.R.Pate, Tinnevelly District Gazetteers P.69
2. வி.இராமமூர்த்தி, (1966) தென்னிந்திய கோட்டைகள்.

யர்களை மிகவும் நம்பி ஆட்சி செய்யும் அதிகாரத்தை தம்மிடமும், படைகள் முதலிய ஒத்தாசைகட்கு ஆங்கிலேயர்களை வசப்படுத்தியும் இருந்தான். அவர்கள் மூலமாகவே 1755ல் ஹெரானை நெல்லையில் வசூலுக்கு அனுப்பினான். அவனும் நவாப்பின் மூத்த சகோதரரான மாபூஸ்கானும் நெல்லைவரை சென்றனர். முதலில் நத்தக் கோட்டையில் கைவைத்தன, அங்கே 400க்கும் மேற்பட்டவர்களை கொன்று குவித்தான் ஹெரானின் படையிலிருந்த கேப்டன் ஒருவன்.

இவனும், மாபூஸ்கானும் மேற்கொண்ட சில போலி விசுவாச உயர்வுகளால், முகமதலி தன் பாதுகாப்பும் நாட்டின் பாதுகாப்பும் கருதி வெள்ளையர் மீது அதிக ஈடுபாடு கொண்டிருந்தான். வெள்ளையர்கள் மே 1756ல் யூசுப்கானை அனுப்பினார்கள். அவன் கயத்தாரில் மாபூஸ்கானுடன் சேர்ந்து கொண்டான்.[2]

யூசுப்கான் தென்னாட்டிற்கு வரும்போது அவனுக்கு பாளையங்கோட்டையும், மதுரைக் கோட்டையுமே பெரிதாகத் தோன்றின. பாளையங்கோட்டை பழுதடைந்துள்ளதாகவும் அதன் சுவர்களை பழுதுபார்த்து வருவதாகவும் 1.1.1757 [3] தேதியிட்ட தம் கடிதத்தில் சென்னை கோட்டைக்கு எழுதியுள்ளான். ஆயினும் அவர்கள் நெல்லையில் பல பெரிய போர்கள் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்கள் வில்லிபுத்தூர் நெல் கட்டான் செவல், சிவகிரி, சொக்கம்பட்டி வடகரை, ஊத்துமலை, ஈரட்டை, நடுவிற்குறிச்சி, களக்காடு, பாஞ்சாலங்குறிச்சி போன்ற பல கோட்டைகளை தகர்த்தனர். யூசுப்கான் 18.1.1762ல் சென்னை கோட்டைக்கு எழுதிய கடிதத்தில் அப்போது 29 கோட்டைகளை தகர்த்து விட்டதாகக் கூறியுள்ளான்.

---

1 [illegible] District Gazetteers [illegible] 73.
2. Military Country correspondence 1756 - Page. 63.
3. Country (Military) correspondence, 1757 P.2.

திருவிதாங்கூரார்களின் உதவியைப் பெற்று பூலித்தேவரைவெல்ல அரியதோர் உபாயம் செய்தான் யூசுப்கான்.[1] அதன்பொருட்டு களக்காட்டையும், அதன் பகுதிகளையும் திருவிதாங்கூராருக்கு தானம் செய்ய தாம் விரும்பும் வேளையிலும், தமக்கு துன்பம் நேரிட்ட வேளையிலும் படையுதவி செய்ய வேண்டுமென அவர்களிடம் ஒப்பந்தம் செய்தான் யூசுப். அதனை சோதிக்கும் வகையில் பூலித்தேவரது வாசுதேவநல்லூர் கோட்டைப்போர் நிகழ்த்தும் வாய்ப்பை அவன் பெற்றான்.[2] அதற்காக திருவாங்கூர், அச்செங்கோ ( )-விலிருந்து படைகளைப் பெற்றான். பூலித்தேவரின் மிகவும் பலம் வாய்ந்த இக்கோட்டை குறிவைக்கப்பட்டது. இக்கோட்டை ஒரு மண் கோட்டைதான். கள்ளர் படைகள் இக்கோட்டையை காவல் காத்தனர். யூசுப்கான் தனது 18 பவுண்டர்களை வீசினான்.[3] பாதுகாப்பு அரண்களை தகர்த்தான். ஏதோ கொஞ்சம் பீரங்கி வேலை செய்தாலும் நேரம் செல்லச் செல்ல அது வெடிக்கவில்லை. ஆனால் யூசுப்கானின் முகாமிற்குள் பூலித்தேவரின் மற்றொரு கோட்டையான நெல்கட்டான் செவலிலிருந்த வீரர்கள் புகுந்து தாக்கி சேதப்படுத்தினர். கோட்டைப் படையுடன் மிக்க தீரத்துடன் போரிட்டான். யூசுப்கான் கோட்டையிலிருந்து கிளம்பும் நெருப்புக்கும், காடுகளில் எரியும் நெருப்புக்கும் இடையில் தொடர்ந்து போரிட்டார் தேவரின் படைகள். ஆனால் மாலை நேரம் யூசுப்பின் நிலைமை மோசமானது. படைகளுக்கு ஓய்வுகொடுத்துவிட்டு, பாளையங்கோட்டை போய்ச் சேர்ந்தான். திருவாங்கூர் படைகள் மேற்கே அவர்களது பாடி வீடு நோக்கிச் சென்றன.[4]

இந்த மாற்றார் படையை பூலித்தேவர் படைகள் அழித்த காட்சி வள்ளுவன் குறளின் சாயலில் (ஒப்பில்)

---

1. ந.இராசையா - பக்கம் 132-133 மாமன்னன் பூலித்தேவன்
2. [illegible]
3. ந.இராசையா, 1992-பக்கம் 130 மாமன்னன் பூலித்தேவன்.
4. Country correspondence (Military) 1758 - Page.50-51.

"சிறு காப்பிற் பேரிடத்தாகி உறுபகை
ஊக்கம் அழிப்ப அரண் (குறள் 744)

என்ற குறளை மெய்ப்பிக்கின்றது. (பொருள் - காக்கவேண்டிய இடம் சிறியதாய், மற்ற இடம் பெரிய பரப்புள்ளதாய் தன்னை எதிர்த்து வந்த பகைவருடைய ஊக்கத்தை அழிக்கவல்லது அரண்)

இதையடுத்து, கி.பி.1783ல் மீண்டும் ஒரு முறை பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை புல்லர்டோன் தகர்த்தான்.[1]

கி.பி.1767ல் சிவகிரி கோட்டை மீது மேஜர் பிளின்ட் என்பான் படை கொண்டு தாக்கினான்.

கி.பி.1797-ல் இராமநாத புரத்தில் புரட்சி எழுந்தபோது, பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரன் அந்த புரட்சியில் பங்கு கொள்ள திட்டமிட்டான். இதையுணர்ந்த கலெக்டர் ஜாக்சன் பாஞ்சாலத்தாருக்கு தூதனுப்பி தம்மை இராமநாத புரத்தில் சந்திக்குமாறு கேட்டான். இதற்கிடையே மேஜர் பானர்மென் பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுக்கிறான். கட்டபொம்மன் இந்தப்படையெடுப்பிலிருந்து தப்பி புதுக்கோட்டை சேர்கிறான். அங்கே பிடிபட்டு, கயத்தாறு கோட்டைக்கருகே தூக்கிலிடப்பட்டு மரணமடைகிறான்.[2] எனவே பாஞ்சாலங்குறிச்சி எளாயிரம் பண்ணை, நாகலாபுரம் கோலார்ப்பட்டி, காடல்குடி, முதுகுளத்தூர் கோட்டைகள் தரைமட்டமாக்கப்பட்டன.[3]
கட்டபொம்மன் மரணத்திற்குப் பிறகு ஒராண்டு காலம் அமைதி நிலவியது. ஆனால், 2.2.1801-ல் மேஜர் மெக்கலே அவரது பாளையங்கோட்டை பங்களா தோட்டத்தில் விருந்தும் கேளிக்கையும் நடத்திக் கொண்டிருக்கும்போது[4] அப்போது

---

1. 1931, திருநெல்வேலி சீமைச்சரித்திரம்.
2. Tinnevelli District Gazetteers By H.R.Pate I.81
3. திருநெல்வேலி சீமைச் சரித்திரம் P 234
4. " "

கம்பெனிப் படைகள் சங்கரன் கோவிலில் அரசியல் கைதிகள் அனைவரும் பாளைச் சிறையைத் தகர்த்து வெளியேறினர். சங்கரன் கோவிலில் இந்தக் கம்பெனியின் வங்கப்படைகள் கயத்தாறுக்கு அருகே கூடி அங்கிருந்து இரவு 9 மணிக்கு பாஞ்சாலங்குறிச்சியை அடைந்தனர். அவர்கள் வியப்புறும் அளவில், அழிந்துவிட்ட பாஞ்சாலங்குறிச்சி கோட்டை எழுந்து நின்றிருந்ததைக் கண்டனர். அதை ஆற்றல் மிக்க காவலோர் காத்து நின்றனர். வந்த படைகள் நிலைமையைக் கண்டு அஞ்சி தங்களிடம் போதிய ஆயுதம் இல்லாத நிலையில் மீண்டும் பாளை சேர்ந்தனர்.[1] பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை நோக்கி துப்பாக்கிகள் சீறத் தொடங்கின.

இதில் தப்பியவர்கள் சிவகங்கை நோக்கிச் சென்று மருதிருவர் புரட்சியில் பங்கு கொண்டனர். அப்போது காளையார் கோயில் பிடிபட்ட நிலை (1.10.1801) கட்டபொம்மனின் சகோதரன் பிடிபட்டு பாஞ்சாலங் குறிச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கே தூக்கிலிடப்பட்டான்.

தளவாய் பிள்ளை என்பவன், பாஞ்சாலங்குறிச்சியர்களின் முன்னிலை ஆதரவாளர்களை எவரும் காணக் கிடைக்காமல் நாங்குநேரி மறவர்களிடம் அடைக்கலம் புகுந்தான். வெள்ளையர்கள் அங்கு படைகளை அனுப்பி அவர்களை அடக்கி சிலரைக் கழுதிக் கோட்டைக்கும், சிலரை சென்னை கோட்டைச் சிறைக்கும் அனுப்பினார்கள்.

"எனை மாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்" (குறள் 750)

என்ற வள்ளுவர் குறளுக்கேற்ப எத்தகைய பெருமைகளை உடையதாக இருந்தபோதிலும்

---

1. Tinnevelly District Gazetteers H.R.Pate P.83

இல்லாதவரிடத்தில் அரண் பயனில்லாததாகும். வீரபாண்டிய கட்டபொம்மனுக்குப் பிறகு பாஞ்சாலங்குறிச்சியின் வீழ்ச்சி வள்ளுவன் கருத்தொத்து பயனற்றுப் போயின என்பது கண்கூடு.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டை

அன்று :-

எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லாள் உடையது அரண். (குறள் 746)

தன்னிடம் உள்ளவர்க்கு (வேண்டிய) எல்லாப் பொருளும் உடையதாய், போர் நெருக்கடியான இடத்தில் உதவ வல்ல நல்ல வீரர்களையுடையது அரண் என்று வள்ளுவர் கூறினார். அப்படித்தான் ஒரு காலத்தில் இந்த செயிண்ட் ஜார்ஜ் கோட்டை விளங்கியது. அள்ள அள்ளக் குறையாத செல்வத்தையும் வைரம், வைடூரியம் பொன் வெள்ளி ஆகிய விலை மதிப்பற்ற சொத்துக்களைக் குறைவின்றி வைத்திருந்தது இக்கோட்டைதான். வீரர்களையும் வீரத்தளபதிகளையும்-கமாண்டர்களையும்கூட உருவாக்கியது இக்கோட்டைதான்.

1744ம் ஆண்டில் இக்கோட்டையின் வெளி அரணின் நிழல்களில் அடித்துக் கொண்டிருந்த அலைகளின்மேல் வெண்ணிற நுரைகள் கக்கிக் கொண்டிருந்த போதில், சர்ப் படகிலே வந்திறங்கினான் ராபர்ட் கிளைவ். பின்னர் அவன் அங்கே ஒரு சாதாரண குமாஸ்தாவாக பணிபுரிந்தான். அவன் அங்கேயே திருமணம் செய்துகொண்டான். பலருக்கு திருமணக் கூடமாகக்கூட விளங்கியது இந்தக் கோட்டைதான்.

கவர்னர்கள் தங்கள் அதிகாரங்களைக் காட்டி கர்னாடி மாநிலத்தையே கலக்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு காலத்தில் அனைத்துப் பாளையக்காரர்களும், புரட்சிக்காரர்களும் இந்தக் கோட்டையிலிருந்து பிறக்கும் ஆணைகளுக்கு செவி சாய்த்தனர்.

ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி கி.பி.1599-ல் துவங்கியது. அடுத்த 9 ஆண்டுகள்[1] கழிந்தபிறகு 24.8.1608 அன்றுதான் ஆங்கிலேயர்களின் ஹெக்டர் என்ற கப்பல் இந்திய கடற்கரையில் நங்கூரமிட்டது. வில்லியம் ஹாகின்ஸ் என்பவரே முதலில் வியாபார நோக்கமாக வழிவகைகள் காண அனுப்பப்பட்டான். அதற்கும் முன்பே டச்சும் (1598), பிரெஞ்சும் தங்கள் வாணிப முயற்சிகளின் மேல் கூடாரம் அமைத்திருந்தார்கள். சூரத்தில் (1612) தொடங்கிய வாணிபமுயற்சி மசூலிப்பட்டினம் புலிக்கோட்டை, ஆர்மகோன் (1626) என்ற படிப்படியான வளர்ச்சியில், ஒரு நாள் சென்னைக்கு அருகே ஆண்ட்ருகோகன், பிரான்சிஸ்டே (1639) இவர்களின் முயற்சியில் சிறுகோட்டை எழுந்தது.[2] கொள்ளைகளைத் தடுக்கவும், வியாபாரத்தைப் பெருக்கவும், அவர்கள் தங்கள் இருப்பிடத்தை பலமாக்கிக் கொள்ள எண்ணியபோதும், வியாபாரம் பெருகிவிட்ட நிலையிலும், பெரிய அளவில் கோட்டை பெரும் மாறுதலை அடைந்தது. கோட்டையைச் சுற்றி அகழி அமைத்து, அந்த அகழிக்கு கூம் ஆற்றிலிருந்து நீர் வரும் வண்ணம் அமைக்கப்பட்டது. இக்கோட்டை கடலுக்கருகில் இருந்தது. சின்னக்கோட்டையாக உருவானாலும் 1640ல் தொடங்கி 1653ல் தான் இது கட்டி முடிக்கப்பெற்றது. 1714ல் இதனையே 'கோட்டைச் சதுக்கம்' என மாறுதல் செய்து விட்டார்கள். கோட்டைக்கு வெளியே [illegible] என்ற பெயரில் போர்த்துகீசியர்கள் தங்களுக்கு வீடுகளை அமைத்தார்கள். வெள்ளையர்கள் தங்கள் இறைவணக்கத்துக்காக கோட்டைக்குள்ளே 17-ம் நூற்றாண்டில் செயின்ட் மேரீஸ் சர்ச்சை உருவாக்கினார்கள்.[3] எழுகுயேல் 1672ல் கவர்னராக வந்தான். வரி வசூலித்து அதன் மூலமாக இந்த சர்ச் அமைய அவனே காரணமானான். இது இந்தியாவில் ஆங்கிலேயர்களின் முதல் சர்ச் எனலாம்.

---

1. N.S.Ramasami, Page.3 The Fort St. George
2. Vestiges of old Madras P.26
3. Vestiges of old Madras by H.B.Love P.199
4. " " P. 402

கோட்டைக்குள்ளே இங்கிலீஷ், ஸ்கோட்ச், பிரெஞ்சு, ஜரீஷ் என நான்கு முனைகள் அக்காலத்தே உண்டு. தெருப் பெயர்கள் செயின்ட் தாமஸ் தெரு, ஜேம்ஸ் தெரு, சார்லஸ் தெரு, சவுட்ரி தெரு, நடுத்தெரு, குளோஸ்டர்-யார்க் தெரு, யார்க் சந்து என்ற பெயரில் அழைக்கப்பட்டன.

கி.பி.1710ல் கோட்டைக்குள் பல வீடுகள், கட்டடங்கள் உருவாயின. கோட்டையின் வடக்கே சின்னச்சிறு பட்டணம் உருவானது. கோட்டைக்கு வாயில் இரண்டே. அவை உட்புறவாயில், சத்திரத்து வாயில் (choultry gate) ஆயினும் இக்கோட்டைக்கு துணைக் கோட்டையாக எழும்பூரில் ஒரு கோட்டை 1710ல் எழுப்பப்பட்டது. இக்கோட்டை 6 அடி உயரமும் 12 அடி பருமனும் 100 கஜம் சுற்றளவும் கொண்டது. 1793ல் மேஜர்மால் என்பவன் இதில் பாலம் ஒன்றைக் கட்டினான். பின்னர் இது இரயில்வே இலாக்காவுக்கு விற்கப்பட்டது.

1746 செப்டம்பரிலிருந்து, ஆகஸ்டு 1749 வரை பிரெஞ்சுக்காரர்கள் இக்கோட்டையில் இருந்தபோது, பல மாறுதல்கள் செய்யப்பட்டன.

கோட்டையின் வடக்குச் சுவரிலிருந்து 400 கஜ தூரத்திலிருந்த கறுப்பர் பட்டணத்தை (தமிழர் பகுதி) பிரெஞ்சுக்காரர்கள் அழித்தனர். இதனால் முத்யால் பேட்டும், பெத்த நாயக்கன் பேட்டும் கறுப்பர் பட்டணமாயின. பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து கோட்டையை மீட்டதும், கோட்டை புதுப்பிக்கப்பட்டது. 'பிகாட்' கவர்னராக இருந்தபோது இப்படி நடந்தது. 1758-59ல் மீண்டும் பிரெஞ்சு லாலியின் முற்றுகை சென்னையில் நடந்தது. 1765ல் மற்றொரு முற்றுகைக்குப் பின்னர் பென்பீல்ட் என்ற பொறியாளர் கோட்டையை பலப்படுத்தினார். 1771ல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அப்போது சிலர் கோட்டைக்குள்ளிருந்த பழைய வீடுகளை அதன் சொந்தக்காரர்கள் விற்றுவிட்டு கோட்டைக்கு வெளியே வீடுகள் கட்டிக்கொண்டனர்.

கி.பி.1783ல் கோட்டையின் அனைத்துப் பகுதிகளும் மறு புனரமைப்புச் செய்யப்பட்டன. இந்தியாவிலேயே நேர்த்தியாக அமைக்கப்பட்ட கோட்டை என்று கம்பெனியின் இராணுவப் பொறியாளர் இக்கோட்டையினைக் குறிப்பிட்டுள்ளனர். இக்கோட்டையின் மீது பிரெஞ்சு ஆக்கிரமிப்புக் காரணமாக 1752-1761 கால கட்டத்தில் 22 லட்ச ரூபாயும், 1772-1783 கால கட்டத்தில் 42 இலட்ச ரூபாயும் செப்பனிடும் பணிக்காக செலவிடப்பட்டது. 1875ல் இதன் அருகே ஒரு துறைமுகம் உருவானது.

அலெக்சாண்டர் உறாமில்டன் தனது A New account of the East Indies என்ற புத்தகத்தில் (1727) இந்தக் கோட்டையைப் பற்றி விமர்சித்து எழுதியுள்ளார்.

கோட்டையின் இன்றைய நிலை:

இன்று சிவில் மற்றும் இராணுவ விவகாரங்கள் அனைத்தும் இங்கிருந்தே நடத்தப்படுகின்றன. இங்கு தான் சட்ட மன்றம், தலைமைச் செயலகம், மைய மாநில அரசுகளின் சில அலுவலகங்கள் ஆகியவை உள்ளன. இக்கோட்டையில் பழமையைக் குறிக்கும் பல கட்டடங்கள், நாட்டிலேயே மிக உயர்ந்த கொடிக்கம்பம், அணி வகுப்பு மைதானம் யாவும் உள்ளன.

ஒரு சமயம் கிழக்கிந்திய கம்பெனியின் கொடி இக்கோட்டையின் கொடி கம்பத்தில் பறந்தது. அதனை பின்னர் அப்புறப்படுத்தி விட்டு, ஐக்கிய கொடியை 1687ல் பறக்க விட்டார்கள். அதன் பின்னர் இந்திய தேசியக் கொடி 1947 ஆகஸ்டு 15 முதல் பறக்கிறது. இக்கொடிக்கம்பத்தின் முன் இருப்பது தலைமைச் செயலகக் கட்டிடம். இதற்குள் ஃபோர்ட் உறவுஸ் உள்ளது. 1675ல் கட்டப்பட்டதும் பிராக்கிஸ்டே கட்டிய முன்னாளைய அமைப்பின் மாற்று வடிவமே இந்த ஃபோர்ட் உறவுஸ். இதில் காணும் வேறு வடிவமைப்புகள் 1825க்குப் பிறகு கட்டப்பட்டவையாகும்.

முன்பு டவுன் ஹாலாக இருந்தஇடம், தற்போது சர்ச்சுக்குத் தெற்கேயுள்ள ராணுவத் தலைமையகமாகும். சர்ச்சுக்கு எதிரேயுள்ள சாலைக்கு அடுத்து கிளைவ் இல்லம் உள்ளது. அதில் தான் 1753 வரை கிளைவ் வாழ்ந்தார். அடுத்து வெல்லெஸ்லி வாழ்ந்த இடத்தில் பாதுகாப்புத்துறை அலுவலகங்கள் உள்ளன. "Barrack Square" மைதானத்திற்கு அடுத்து உள்ளது. "Garrison Theatre" என்றுள்ள இந்த இடம் 1740ல் உருவானது. கோட்டை அருங்காட்சியகம் முன்பு தனிப்பட்டவரின் வியாபாரக் கூடமாக இருந்தது. 1787-90-க்குள் இடித்துவிட்டு புதிய கட்டிடம் உருவானது. அங்கிருக்கும் பழைய கலங்கரை விளக்கம் 1736ல் கட்டப்பட்டது.

<u>தேவனாம் பட்டிணம் கோட்டை அல்லது செயின்ட் டேவிட் கோட்டை</u>

1677-78இல் கர்நாடகம் முழுவதும் மராட்டியர்களால் கைப்பற்றப்பட்டது. வீரசிவாஜி மாபெரும் கோட்டையான ரெய் காட்டிலிருந்து புறப்பட்டு கர்நாடகத்துள் நுழைந்தான். முதலில் இவன் செஞ்சி, தஞ்சை ஆகிய இடங்களிலிருந்தே கோட்டைகளைக் கைப்பற்றினான். அப்போது சிவாஜி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சீசர் ஸ்பெயின் நாட்டை கண்டது போன்று அவன் கோட்டைச் சுரங்கத்தில் தங்கம், வைரம், மரகதம் போன்ற அரிய திரவியங்களைக் கைப்பற்றினான். தன் போர்த்தந்திரங்களைப் பயன்படுத்தி தென்னகத்தின் கோட்டைகள் அனைத்தையும் பிடிக்க ஆயத்தமானான். இது அன்றைய வெள்ளையர்கள் போற்றும்படி அமைந்தது.[1]

சிவாஜி தனது ஹவில்தார்களை அனுப்பி பாண்டிச் சேரியைக் கைப்பற்றியதோடு காவிரி நதிப் பிரதேசத்தை

---

1. Military consultations dated April 1678.

தனக்கு பாதுகாப்பு அரணாக பயன்படுத்துவதற்கு வேண்டிய பணிகளைச் செய்தான்.

கி.பி.1674ல் பிஜப்பூர் நிர்வாகத்தின் கீழ் செஞ்சி இருந்தபோது அதன் கவர்னராக இருந்த முகமதுகானின் செஞ்சியை ஆங்கிலேயர்களுக்குத் தாரை வார்க்கக் கருதி சென்னை கோட்டைக்கு கடிதம் எழுதினான். அவனே போர்ட்டோ நோவா, வர்தாவூர் ஆகிய இடங்களில் கோட்டைகள் கட்டுவது, தொழில் துவக்குவது போன்ற யோசனைகளைத் தெரிவித்தான். ஆனால், 1677ல் சிவாஜியின் படையெடுப்பில் இவை நடைபெற வாய்ப்பில்லாமல் போய் விட்டன. ஆயினும், சென்னை கோட்டையின் கவர்னர் மூலமாக தூது வந்த எழிகுயேல் என்ற எழுத்தர் செஞ்சிகானிடம் பேசி ஓர் ஒப்பந்தம் மேற்கொண்டார். இதை இலண்டனில் இருந்த இயக்குநர் குழு ஏற்றுக் கொண்டதாக வரலாறு.[1]

சின்னய்யா செட்டி என்பவரால் சில காலத்திற்கு முன்பே போர்ட்டோநோவா, தேங்காய் பட்டினம் ஆகிய டச்சுத் தொழிற் கூடங்களுக்கு அருகில் கட்டப்பட்ட கோட்டை ஒன்றிருந்தது. அதனை 1675ல் டச்சுக்காரர்கள் வாங்குவதாக இருந்தார்கள். இது பிரஞ்சு மற்றும் மராட்டியர்களின் விருப்பங்களுக்கு எதிரானது. ஆனாலும் மராத்தியர்கள் அனுமதியுடன் போர்டோநோவாயில் ஒரு தொழிற்சாலை கட்ட அனுமதி பெற்றார்கள்.

சென்னை கோட்டையில் கவர்னராக எழிகுயேல் 1687ல் பதவிக்கு வந்தான். முந்திய ஒப்பந்தப்படியும் அவன் தம்பி தாமஸ்யேல் மூலமாகவும், மராட்டிய தளபதி ராமராஜா விடமிருந்து தேவனாம் பட்டினமும் இவனால் கைப்பற்றப்பட்டது. கி.பி.1690ல் இங்கிருந்த கோட்டை போர்ட் செயின்ட் டேவிட் கோட்டை என்று அழைக்கப்பட்டது. இது ஒரு தீவாக இருந்ததால் ஐரோப்பியர்களை இது வெகுவாகக் கவர்ந்தது. சரக்குகள் விற்பனையும் அடிமை வாணிபமும் இங்கு நடைபெற்றது.

---

1. Proceedings of the Court of Directors dated 24th December 1675.

இக்கோட்டையை மராட்டியத் தளபதி ராமராஜாவிடமிருந்து சுமார் 30,000 பகோடாக்கள் கிரயத்திற்கு கிழக்கிந்தியக் கம்பெனி வாங்கியது. இக்கோட்டையின் அதிலிருந்த பீரங்கிகள் கட்டடங்கள், மனைகள், காடுகள் மற்றும் கெடிலம் நதிமுகமும் கிடைத்தன.

கெடிலம் நதியின் இந்த இக்கோட்டையிலிருந்து சுமார் 100 டன் எடை கொண்ட கப்பல்கள் சரக்குகளை ஏற்றிச் சென்றன.[1] கி.பி. 1720ல் இக்கோட்டை புதுப்பிக்கப்பட்டது. 1745-1750 களில் ஆங்கிலேயர்கள் இதனை தலைநகராப் பயன்படுத்தினர். அச்சமயம் சென்னைக் கோட்டையை பிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றியிருந்தார்கள். பிரெஞ்சு கவர்னர் டியூப்ளே இக்கோட்டையைத் தாக்கத் திட்டமிட்டுத் தாக்கினான். ஏற்கனவே செஞ்சி மன்னன் சொருப்சிங்கு 1712ல் இக்கோட்டையைத் தாக்கினான்.

பிரெஞ்சு-ஆங்கிலேயர் சண்டைகள் அடிக்கடி ஏற்பட்டதன் விளைவாக இக்கோட்டையும் அதன் சுற்றுப்புறங்களும் அழிவுறத் தொடங்கின. 1785ல் வெர்சேயில்ஸ் உடன்படிக்கையின்படி இப்பகுதி ஆங்கிலேயருக்கு வந்து சேர்ந்தது.

கோட்டைகள் மனிதனின் மதியூகத்தால் தோற்றுவிக்கப்பட்டு அன்றைய நாட்களில் மன்னர்களும் மாமன்னர்களும் தங்கள் வாழ்க்கையை இனிதே கழிக்க அவற்றைப் பயன்படுத்தி வந்தனர். பிற்காலத்தில் அவற்றின் அழகும் ஏற்றமும் தோற்றமும் கெட்டு சிலருக்கு சிறைக் கூடங்களாகவும் பயன்பட்டு வந்திருக்கின்றன. வெள்ளையர்கள் நமது முன்னோர்களால் உருவாக்கப்பட்ட நூற்றுக்கணக்கான கோட்டைகளையும் அவற்றின் அரண்களையும் நமது பயன்பாட்டுக்கு உதவாதவாறு அழித்து, மண்ணோடு மண்ணாக்கி விட்டனர். பாளையங் கோட்டையும், பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையும் மதுரைக் கோட்டையும் அதன் அடிமட்டம் கூட

1. Asylum Press Almanac 1933 P.8, 11, 91
South Arcot District Manual 1878 P.82.

இல்லாது சிதைவுற்றன. ஆனால், காலத்தின் நினைவுச் சின்னங்களாக இன்னும் பல கோட்டைகள் உள்ளன.

கட்டபொம்மன் சந்ததியினர் (ஊமைத்துரையின் மனைவி, மக்கள் முற்றும் உட்பட) பலர் பூந்தமல்லி கோட்டையில் அடைபட்டுக் கிடந்தது. சேதுபதிகளின் இறுதி வாரிசான முத்துராமலிங்க சேதுபதி சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக்குள் உயிர் துறந்தது. வேலூர் கோட்டைக்குள் மாவீரன் திப்பு குடும்பம் சிறைப்பட்டுக் கிடந்தது. கண்டிராஜாவும் அச்சிறையில் இருந்தது ஆகியவை கோட்டைகளின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சங்களை கருதப்படுகின்றன.

இன்னும் நினைவுச் சின்னங்களான அகக்கோட்டைகள், யாவும் தொல்பொருள் ஆய்வுத் துறையின் பாதுகாப்பில் பராமரிக்கப்பட்டு நமது புராதன கலை அம்சங்களாகத் திகழ்வது வெள்ளிடைமலை.

துறைச்செய்திகள்

மாவட்ட ஆவணக்காப்பகம், சேலம்:

ஆவணங்கள் மாற்றப்பட்ட அலுவலகங்கள்	- 10
மாற்றப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை	-466
அட்டவணைச் சீட்டுகள் தயாரிப்பு	-428

மாவட்ட ஆவணக்காப்பகம், மதுரை:

ஆவணங்கள் மாற்றப்பட்ட அலுவலகங்கள்	- 20
மாற்றப்பட்ட ஆவணங்கள் எண்ணிக்கை	-311
அட்டவணைச் சீட்டுகள் தயாரிப்பு	-178

தனியார் ஆவணம்:

6.1- தனியார் ஆவண சேகரிப்பு தொடர்பாக, மதுரையிலுள்ள 1948 முதல் 1952 வரையிலான காலத்தில் மதுரை, நகராட்சி சபை தலைவராக இருந்த 95 வயதான திரு டி.கே.ராமா என்பவரும் திரு என்.எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி என்பவரும் நேரில் தொடர்பு கொள்ளப்பட்டனர். ஆனால், இக்காப்பகத்தில் மையப்படுத்தத் தக்க முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்கள்/நூல்கள் அவர்களிடம் ஏதுமில்லையென கண்டறியப்பட்ட

6.2 சிங்கம்பட்டி சமஸ்தானத்திலிருந்து பெறப்பட வேண்டியுள்ள 5 ஆவணங்களின் மூல ஆவணங்கள் அல்லது அவற்றின் ஜெராக்ஸ் நகல்களை இக்காப்பக உதவி ஆணையர் அல்லது அவற்றின் ஜெராக்ஸ் நகல்களை இக்காப்பக உதவி ஆணையர் அல்லது ஆராய்ச்சி உதவியாளர் நேரில் சென்று பெற்று வர தலைமை அலுவலகக் கடித எண்.3941/வஆகு/93, நாள் 26.5.93-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, இக்காப்பக உதவி ஆணையர், சிங்கம்பட்டி சென்று மேற்படி ஆவணங்கள் அல்லது அவற்றின் ஜெராக்ஸ் நகல்கள் பெற்றுக்கொண்டு அந்த ஆவணங்களின் விவரங்கள் பூர்த்தி செய்யப்பட்ட வடிவங்களில் உரிமையாளரின் கையொப்பம் பெற்று

..

வரவும் அவருக்கு வசதியான ஒரு நாளைக் குறிப்பிட்டு தெரிவிக்குமாறு சிங்கம்பட்டி ஜமீன்தார் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பதில் பெறப்பட்டதும் தக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6:3 மதுரை, வட்டார வரலாற்று ஆவண ஆய்வுக்குழுவின் அலுவல் சார்பற்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.எம்.கமால் அவர்களை நேரில் சந்தித்து இராமநாதபுர சமஸ்தான ஆவணங்கள் பெறுதல் தொடர்பான விவரங்கள் சேகரித்தல் குறித்து முயற்சி மேற்கொள்ள அவருக்கு வசதியான ஒரு நாளையும் நேரத்தையும் தெரிவிக்குமாறு இக்காப்பகத்திலிருந்து கடிதம் மற்றும் நினைவூட்டு அனுப்பப்பட்டுள்ளது. பதில் பெறப்பட்டதும், தக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6:4. திண்டுக்கல் அண்ணா மாவட்டம், செண்பகனூரிலுள்ள
-ன் இயக்குநருக்கு, அக்காப்பகத்தை, இக்காப்பக அலுவலர் பார்வையிட்டு அக்காப்பக ஆவணங்கள் தொடர்பான விவரங்கள் சேகரித்து வர ஏதுவாக ஒரு நாளையும், நேரத்தையும் தெரிவிக்கும்படி கோரி அவருக்குக் கடிதம் மற்றும் நினைவூட்டு அனுப்பப்பட்டுள்ளது. பதில் பெறப்பட்டதும் தக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6:5 காமராஜர் மாவட்டம், சேத்தூர் ஜமீனிலுள்ள ஆவணங்கள் தொடர்பாக விவரங்கள் அளிக்கும்படியும், அங்கு வர ஒரு நாளையும், நேரத்தையும் கடிதம் மூலம் தெரிவிக்குமாறும் கோரி மேற்படி ஜமீன்தாருக்குக் கடிதம் மற்றும் நினைவூட்டு அனுப்பப்பட்டுள்ளன. பதில் பெறப்பட்டதும் தக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6.6: புதுகை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றிய ஆணையரிடமுள்ள 26 செப்பேடுகளின் ஜெராக்ஸ் நகல்கள் கோரி இக்காப்பகத்திலிருந்து கடிதம் மற்றும் நினைவூட்டுகள் அனுப்பப்பட்டன. அதற்கு பதிலாக, மேற்படி ஆணையர் வசமிருந்த செப்பேடுகளை ஏற்கனவே தஞ்சை தமிழ்பல்கலைக்கழகம், ஆய்வாளர் புலவர் திரு இராசு அவர்களுக்குக் கொடுத்து பதிவுகள் செய்யப்பட்டு திருப்பி அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆவணக்காப்பகம், திருச்சி

ஆவணங்கள் மாற்றப்பட்ட அலுவலகங்கள்	)	13
மாற்றப்பட்ட ஆவணங்கள் எண்ணிக்கை	)	541
அட்டவணைச் சீட்டுகள் தயாரிப்பு	)	2650

தனியார் ஆவணம்:

தனியார் வசமுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கிறித்துவ தேவாலய ஆவணங்கள், மற்றும் இஸ்லாமிய தர்கா பற்றிய விவரங்கள், ஜமீன்தார்கள், அரச பரம்பரையினர் மற்றும் அரசியல் தலைவர்கள் பற்றிய விவரங்கள் அறியவும் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு [illegible]கின்றன.

1. தஞ்சாவூர் அருங்காட்சியக காப்பாட்சியரிடம் தரங்கம்பாடி டேனிஷ் ஆவணங்கள் பற்றிய விவரம் கேட்டு கடிதம் மூலம் தொடர்பு கொள்ளப்பட்டது. அதன்படி பெறப்பட்ட ஆள் ஒற்றி கடன் சீட்டு, தொடராச்சீட்டு ஆகிய ஆவணங்களின் வாசகங்கள் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளது.

2. குளித்தலையைச் சேர்ந்த தியாகி திரு கே.ஏ.தர்மலிங்கம் அவர்களை ஆராய்ச்சி உதவியாளர் நேரில் சந்தித்து சுதந்திர போராட்ட காலத்திய புத்தகங்கள், பேப்பர் கட்டிங்கள், போஸ்டர்கள் முதலியவற்றை பெற்று வந்தார். அவற்றின் பிரதிகள் எடுக்கப்பட்டு தக்க படிவங்களில் பூர்த்தி செய்யப்பட்டு தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது.

3. திருச்சிராப்பள்ளி மாவட்ட சுதந்திர போராட்ட வீரர்களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொண்டு அக்காலத்திய தகவல்கள் சேகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

4. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அரச பரம்பரையினர் மற்றும் மத தலைவர்களது பட்டியல் கோரி கடித தொடர்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆவணக்காப்பகம்

இக்காலாண்டில் சீர்ந்தாய்வு செய்வதற்காக எடுத்துக் கொண்ட ஆவணங்களின் எண்ணிக்கை	3384
சீர்ந்தாய்வு செய்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை	125

தேவையில்லாதவை என திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை	3259

மேலும், இந்த காலாண்டில் 1.1.1993 முதல் 31.3.1993 வரை மொத்தம் 3,384 ஆவணங்கள் பெறப்பட்டுள்ளன.

இதுவரையில் பெறப்பட்ட மொத்த ஆவணங்களின் எண்ணிக்கை	84,500
31.3.93 வரை திருப்பி அனுப்பிய ஆவணங்களின் எண்ணிக்கை	3,259

எண்ணிக்கை	81,241

தனியார் ஆவணங்கள் சேகரிப்பு

1. குளித்தலை தியாகி திரு கே.எ.தர்மலிங்கம் அவர்களிடமிருந்து சுதந்திர போராட்ட குறிப்புகள், புத்தகங்கள் முதலியன சேகரிக்கப்பட்டு தலைமை அலுவலகத்திற்கு தக்க படிவங்களில் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன.

2. தஞ்சாவூர் அருங்காட்சிய காப்பாளர் திரு. இராமச்சந்திரன் அவர்களிடமிருந்து தரங்கம்பாடி டேனிஷ் ஆளுநர்கள் பற்றிய குறிப்புகள் பெறப்பட்டுள்ளன.

Essays on topics of
Social Sciences, Archives and
matters of general interest are
welcome in English or Tamil, for
Publication in AVANA AMUDHAM
subject to the Editor's discretion.

Research thesis or books may
be sent to the Commissioner
of Archives, Tamil Nadu
Archives Madras -600 008, for
reviews to be included in the
journal.

The Tamil Nadu Archives
does not, however accept any
responsibility for the views
expressed by the authors
in their essays, etc.

Printed at Govt. Branch Press, Madras -112